சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 42/2020

பெயர் திரு. கபாலி த/பெ. நாள். 18.09.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ரூ.4,00,000/- மற்றும் வட்டி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வட்டித் தொகை எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. பிரதிவாதியை எனக்கு கமலக்கண்ணன் என்பவர் மூலமாகத் தெரியும். பிரதிவாதி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் கீழ்ச்செம்பேடு கிராமத்தைச் சேர்ந்தவர். பிரதிவாதி எந்த வருடம் கடன் கேட்டார் என்றால் 10.05.2017 அன்று கேட்டார். மேற்கண்ட தேதிக்கு 20 நாள்களுக்கு முன்பு கடன் கேட்டார். எவ்வளவு ரூபாய் அவர் கடன் கேட்டார் என்றால் ரூ.4,00,000/- கடன் கேட்டார். எதற்காக கேட்டார் என்றால் தன் சொந்த செலவிற்காக கேட்டார். நான் லாரி உரிமையாளர் மற்றும் ஓட்டுநராக உள்ளேன். தற்பொழுது லாரி வைத்துள்ளேன். அதன் பதிவு எண்.டிஎன் 49 4523. அது சென்னையில் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஆகும். அந்த புதுக்கோட்டையில் இருந்து வாங்கி வந்து சென்னையில் பதிவு செய்தேன். என் மகன் அந்த லாரியை ஓட்டி வருகிறார். அதில் எவவளவு வருமானம் கிடைக்கும் என்றால் சுமார் 30,000/- அல்லது 40,000/- கிடைக்கும். அதில் குடும்ப செலவிற்கு போக எவ்வளவு நிற்கும் என்றால் 10,000/- போக மீதி ரூ.30,000/- நிற்கும்.

2) பிரதிவாதி கேட்டதாக்க கூறும் தொகை சேமிக்க எனக்கு ஒரு வருடம் ஆகும் என்றால் சரிதான். கடனை எங்கு வைத்து என்னிடம் கேட்டார் என்றால் என் வீட்டில் வைத்து என்னிடம் கேட்டார். அந்த தொகையை யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் கமலக்கண்ணன் முன்னிலையில் கொடுத்தேன்.

கமலக்கண்ணனின் தகப்பனார் பெயர் தெரியாது. அவர் கீழ்ச்செம்பேடு கிராமத்தைச் சேர்ந்தவர். என்ன வகையான நோட்டுகள் கொடுத்தேன் என்றால் ரூ.500/– தாள்கள் கொடுத்தேன். எத்தனை கட்டுகள் கொடுத்தேன் என்றால் 8 கட்டுகள் கொடுத்தேன். ஒரு கட்டுக்கு எத்தனை நோட்டுகள் வைத்து கொடுத்தேன் என்றால் 100 நோட்டுகள் வைத்து கொடுத்தேன். தொகை கொடுக்கம் பொழுதே வட்டியை எடுத்துக் கொண்டு கொடுத்தேனா என்றால் இல்லை. கடனுறுதிச்சீட்டை எங்கு வைத்து எழுதினேன் என்றால் சோத்துப்பாக்கத்தில் வைத்து எழுதினேன். கடனுறுதிச்சீட்டை யார் வாங்கி வந்தது என்றால் பிரதிவாதிதான் வாங்கி வந்தார். அது அச்சடிக்கப்பட்ட கடனுறுதிச்சீட்டா அல்லது முத்திரை வில்லையா என்றால் புரோ நோட் வாங்கி வந்து அதில் முத்திரை வில்லை ஒட்டி அதில் கையொப்பம் பெறப்பட்டது. அந்த கடனுறுதிச்சீட்டை யார் எழுதியது என்றால் நடராஜன் என்பவர் எழுதினார். அவர் எந்த ஊர் என்றால் சோத்துப்பாக்கத்தைச் சேர்ந்தவர். கடனுறுதிச்சீட்டை எழுத எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணி நேரம் ஆனது.

3) கடனுறுதிச்சீட்டை ஏதேனும் பேப்பரில் எழுதி பின்னர் கடனுறுதிச்சீட்டில் எழுதினாரா என்றால் நேராகவே கடனுறுதிச்சீட்டில் எழுதப்பட்டது. எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. கடனுறுதிச்சீட்டு எழுதும்பொழுது யார் உடன் இருந்தது என்றால் பிரதிவாதி, கமலக்கண்ணன் மற்றும் நடராஜன் ஆகியோர் உடன் இருந்தனர். பணம் கொடுத்த பிறகு எழுதினோமா அல்லது எழுதிய பிறகு பணம் கொடுத்தோமா என்றால் எழுதிய பிறகுதான் பணம் கொடுத்தோம். கடனுறுதிச்சீட்டு எழுதியவுடன் யார் முதலில் யார் கையொப்பம் செய்தார் என்றால் பிரதிவாதிதான் முதலில் கையொப்பம் செய்தார். அதன் பின்பு யார் கையொப்பம் செய்தார் என்றால் கமலக்கண்ணன் செய்தார். அதன் பிறகு யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் யாரும் போடவில்லை. நடராஜன் கையொப்பம் போட்டாரா என்றால் அவர் போடவில்லை. கமலக்கண்ணனின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை

கடனுறுதிச்சீட்டில் எழுதப்பட்டதா என்றால் இல்லை.



4) நடராஜன் தன் தகப்பனார் பெயர் மற்றும் முகவரியை எழுதினாரா என்றால் இல்லை. நடராஜன்தான் கடனுறுதிச்சீட்டை எழுதினார் என்றும், அவர் கையொப்பம் செய்யவில்லை என்றும் வழக்குரையில் சொல்லவில்லை. யாரேனும் கடன் கேட்டால் கடன் கொடுக்கும் பழக்கம் எனக்கு உள்ளதா என்றால் இல்லை. இந்த ஒரு வழக்கு மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். நான் நடராஜனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப் போகிறேனா என்றால் அவர் இறந்துவிட்டார். அவருடைய இறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியாது. கமலக்கண்ணனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப் போகிறேனா என்றால் ஆமாம். எனக்கு தற்பொழுது 79 வயதாகிறது. வழக்கு தாக்கல் செய்யும்பொழுது எனக்கு 70 வயது இருக்கும். பிரதிவாதி பாலனுக்கு பங்க்கடை உள்ளது மற்றும் நிலமும் உள்ளது. அவருக்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. அது தனிப்பட்ட சொத்தா அல்லது கூட்டு சொத்தா என்றால் தனிப்பட்ட சொத்தாகும். பணம் கொடுத்தவுடன் பிரதிவாதி வட்டி செலுத்தினாரா என்றால் இல்லை.

5) நான் அவரை கேட்டேனா என்றால் கேட்டேன் அவர் தரவில்லை. எங்கு சென்று கேட்டேன் என்றால் கீழ்ச்செம்பேடு சென்று கேட்டேன். பிரதிவாதி வீடு என்ன வகையான வீடு என்றால் தட்டோடு வீடாகும். பிரதிவாதி ஊருக்கு ஒரத்தி சென்று செல்லவேண்டும். எப்பொழுது சென்று கேட்டேன் என்றால் 2019 மற்றும் 2020ல் கேட்டேன். தேதி ஞாபகம் இல்லை. பிரதிவாதியிடம் என்ன குடும்ப செலவிற்காக கடன் கேட்கிறார் என்று நான் கேட்கவில்லை. கமலக்கண்ணனிடம் அதைப் பற்றி கேட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்துப் பார்க்கில்ல. வழக்கறிஞரும் அதைப் படித்துக் காட்டவில்லை. பாண்டை பைசல் செய்ய சொல்லி வழக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அதனை பிரதிவாதி வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டார். ஏன் உடனே வழக்கு தாக்கல்

செய்யவில்லை என்றால் 2018ல் தாக்கல் செய்து 2020



ல் எண்ணிடப்பட்டது. கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றாலும், நான் போர்ஜரியாக புனைந்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வெளி நபர்கள் கூறியதன் பிரதிவாதியின் கையெழுத்தை புனைந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வழக்கு செலவுத் தொகையுடம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.